# சித்தர் குலாப்ராவ் மகராஜ்

## சாந்திப்பிரியா

( நவம்பர், 2006 ஆம் ஆண்டு நம்முடன் பேசும் ஆவிகள் இதழில் வெளியான கதையின் மறு பதிப்பு இது )



இந்தியாவில் சித்த மனிதர்கள் மிகவும் அதிகம். பல்வேறு இடங்களிலும் அவர்கள் தோன்றிக் கொண்டே இருப்பதும், மறைவதும் உண்டு. அதனால்தான் இந்தியாவை ஒரு சித்த பூமி என அழைக்கின்றனர்.

அந்த வரிசையில் தோன்றியவரே சித்த புருடரான குலாப் குண்டாஜி மோஹோத் என்பவர். முகராஷ்டிர மானிலத்தில் உள்ள அமராவதியில் மதான் என்ற கிராமத்தில் பிறந்தவர் அவர்.பிறந்து ஒன்பதாவது மாதத்திலேயே கண் பார்வையை இழந்து விட்டார். அதனால் அவருடைய பெயரை பதன்யஷக்ஷ ( புத்திசாலிக் கண்களைப் பெற்றவர்) என அழைத்தனர். அதிபுத்திசாலியான அவருக்குக் கண் பார்வை இல்லை என்றாலும், அவருடைய கையில் எந்த புத்தகத்தை எடுத்துக் கொண்டாலும், எந்த மொழியில் அது எழுதப்பட்டு

இருந்தாலும் அதில் எழுதப்பட்டு உள்ள அனைத்துச் செய்திகளும் அவருடைய மனதில் பதிந்துவிடும். அதுவே அவர் பெற்றிருந்த அபூர்வமான ஆற்றல்.

அவருடைய நான்கு வயதில் அவருடைய தாயார் மரணம் அடைந்து விட்டார். ஆகவே தமது இளமைக் காலத்தில் ஆறு வயது வரை தம் தாய் மாமன் வீடுடில் வளர்ந்து வந்தார். ஆவர் வீட்டிற்கு அருகில் இருந்த கிணற்றில் தண்ணீர் நிறப்பிக் கொள்ள வரும் அனைத்துப் பெண்களையும், ஆண்களையும் அவர்களுடைய பெயர் கூறி அழைப்பார். இத்தனைக்கும் அவருக்குக் கண் பார்வை கிடையாது எனும் பொழுது வருபவர ஆணா பெண்ணா னெ பார்க்க முடியாத பொழுது எங்கிருந்து வந்தது அந்த ஆற்றல் என அனைவரும் உணர்ந்த பொழுதுதான் புரிந்தது அவர் ஒரு தெய்வகப் பிறவி அல்லது சித்த புருடர் என்பது.

ஆந்த கிணற்றுக்கு அருகே சென்று அமர்ந்து கொண்டு மணிக்கணக்கில் தியானத்தில் இருப்பதைக் கண்ட அவருடைய உறவினர்கள் கவலை கொண்டனர். ஆனால் அவர் பெற்றிருந்த ஆற்றலை எடுத்துக் கூறி அவர்களை ஊர் ஜனங்கள் அமைதிப்படுத்தினர். தூம் தனியாக இருக்கும் பொழுது நண்பர்களை அழைத்து அவர்களைப் புத்தகங்களைப் படிக்கும்படிக. கூறுவார். அவர்கள் படித்து முடித்தவுடன் அதை அப்படியே ஒப்பிப்பார். தமது பத்தாவது வயதிலேயே வேத சாஸ்திரங்களை நன்கு கற்றறிந்திருந்தார்.

1896 ஆம் ஆண்டில் பதினைந்து வயதான பெண்ணை மணந்து கொண்டார். அடுத்த ஆண்டு முதல் அவர் அக்கம் பக்கத்தில் இருந்த ஊர்களுக்குச் சென்று ஆன்மீகம், மத வழிபாடு போன்ற அனைத்தையும் மக்களிடையே பரப்பத் துவங்கினார். அவருக்குப் பதினாறு வயதான பொழுது சந்த் தியானேஷ்வர மகராஜருடைய சிஷ்யர் ஆனார். 1905 ஆம் ஆண்டில் தான் பகவான் கிருஷ்ணரை மணந்து கொண்டு விட்டதாகவும், தானும் அவருடைய மனைவிகளில் ஒருவர் எனக் கூறி கழுத்தில் தாலி மற்றும் நெற்றியில் குங்குமம் அணிந்து கொண்டு, பெண்கள் உடுத்தும் உடைகளையே அணிந்து கொள்ளத் துவங்கினார்.

தமது இருபத்தி ஒன்றாம் வயதில் மனித வரலாறு குறித்த டார்வின் தியரியைப் பற்றிய நூல் எழுதினார்.பார்வையற்ற அவர் பல்வேறு கருத்துக்கள் கொண்ட ஆறாயிரத்திற்கும் அதிக பக்கங்களைக் கொண்ட நூற்றி முப்பது புத்தகங்களை எழுதி உள்ளார். குண்பார்வையற்ற அந்த மகானுக்கு உபனிஷத்துக்கள், வேதங்கள், யோகங்கள் மற்றும் புராணங்கள் எப்படி

தெரிந்திருந்தன, எங்கிருந்து அவற்றை அவர் கற்றறிந்தார் என்பது புரியாத புதிராகவே இருந்தது. மேலும் அவர் பிராமண சமூகத்தில பிறந்திருக்கவில்லை. கீழ் ஜாதியை சேர்ந்த அவருக்கு பிராமண பண்டிதர்கள் சிஷ்யர்களாக இருந்தது இன்னொரு புதிர். ஆத்வைத்திய கருத்துக்கு முரண்பட்டவர். தான் பெற்ற கல்வி அறிவு, உபனிஷத்துக்கள், வேதங்கள், யோகங்கள் மற்றும் புராணங்கள் போன்ற அனைத்துமே தம்முள் தாமாகவே தோன்றியவை எனக் கூறிக் கொண்டார். மதுர பக்தி மார்கம் மூலம் கிருஷ்ண பக்தியை பரப்பினார். இத்தனை சிறப்புக்களையும் பெற்றிருந்த சித்தர் 1915 ஆம் ஆண்டு இந்த புத உலகை விட்டு மறைந்தார். காலத்தால் அழிக்க முடியாத சித்தர் அவர்.

*( நன்றி: ஒவ்ஒருவருக்குள்ளும் உள்ள கடவுளையும், அவர்களை சுற்றி உள்ள கடவுட்களையும் புரிந்து கொள்ள உதவி வரும் SUGWAY என்ற அமைப்பின் மூலம் கிடைத்த தகவலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது இது )*